**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,**

**METTUPALAYAM**

**DEPOSITION OF WITNESS**

**OS. 18/2023**

**CNR.No.TNCB19000**

| | | | |
|---|---|---|---|
| 24.06.2024 | தங்கராஜ் | த/பெ. கரியப்பன் | வா.சா.1 |

வா.சா.1 தங்கராஜ் மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

இன்றைய கால கட்டத்தில் தாவா சொத்தில் ரங்கசாமியும் மாரிமுத்துவும் தான் விவசாய பணிகளை செய்து வருகிறார்கள் என்றால் நான் தான் செய்து வருகிறேன். நான் எத்தனை நாட்களாக விவசாயம் செய்கிறேன் என்றால் நினைவு தெரிந்து 15 வருடங்களாக விவசாயம் செய்கிறேன். ஒருவர் விவசாயம் செய்கிறார் என்றால் அவர் பெயரில் வருவாய் ஆவணங்கள் இருக்கும் என்றால் சரிதான். தாவா சொத்து சர்வே எண்.234/2 இதன் வருவாய் ஆவணங்கள் யாருடைய பெயரில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

இன்றைய தேதிவரை சர்வே எண்.234/2 ஆனது 1 முதல் 6 வாதிகளின் பெயரில் பட்டா சிட்டா இல்லை என்றால் சரியல்ல. தாவா தாக்கல் செய்த தேதியில் இருந்து இன்றுவரை தாவா சொத்தின் பட்டா சிட்டா ஆகியவற்றின் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் எனது பெயரில் எந்த விதமான பட்டா சிட்டா ஆவணங்களை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக பட்டா சிட்டா கொடுத்துள்ளதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சொன்னது போல் தாவா சொத்தில் எந்த காலத்திலும் சுவாதீனத்தில் இல்லை என்றும் அப்படி இருந்திருந்தால் அதற்கான பட்டா சிட்டா வை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. கடந்த 25 வருடங்களுக்கு மேலாக தாவா சொத்தின் சிட்டா ரங்கசாமி என்பவரின் பெயரில் உள்ளது என்றால் ரங்கசாமி எனது தாய் கெம்பம்மாள் மற்றும் ராஜம்மாள் ஆகியோர்களின் பெயரில் உள்ளது. அவ்வாறு கெம்பம்மாள், ராஜம்மாள் ஆகியோர்களின் பெயரிகளில் உள்ள ஆவணத்தை தாக்கல்

செய்திருக்கிறேனா என்றால் கொடுத்துள்ளேன் நான் சொல்வது போல் அவர்களின் பெயரில் உள்ள ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சிட்டா அடங்கள் ரங்கசாமி என்பவரின் பெயரில் இருந்து ராமசாமி பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டது என்றால் ரங்கசாமி பெயரில் இருந்து ராமசாமி பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டு விட்டது.

போலியாக மாற்றம் செய்யப்பட்டது குறித்து எப்போது எனக்கு தெரிந்தது என்றால் நவம்பர் - 2022 ஆம் ஆண்டு தெரிந்தது. எந்த வருடத்தில் ராமசாமியின் பெயருக்கு மாறியிருந்தது தெரியவந்தது என்றால் 1997 ஆம் ஆண்டு மாறியிருந்தது. 1997 ஆம் ஆண்டில் இருந்து 2022 ஆம் ஆண்டுவரை ராமசாமியின் பெயரில் தாவா சொத்தின் வருவாய் ஆவணங்கள் இருந்தது என்றால் எனக்கு அதைபற்றி தெரியாது. 1997 க்கு பின்பு தாவா சொத்தில் நானும் 1 முதல் 6 வாதிகளும் சுவாதீனத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

1997 ஆம் ஆண்டிற்கு பின்னர் தாவா சொத்தின் வருவாய்துறை ஆவணங்கள் வாதிகளின் பெயரில் இருந்ததற்கான ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் விவசாயம் செய்யவில்லை நிலம் தரிசாக இருந்தது. தரிசாக இருந்தாலும் சிட்டா யாருடைய பெயரில் சொத்து உள்ளதோ அவருடைய பெயரில் சிட்டா வரும் என்றால் சரிதான். 1997 க்கு பின்பு வருவாய் துறை ஆவணங்கள் ராமசாமியின் பெயரில் இருந்து வருகின்றது என்றால் விற்பணை செய்தது எனக்கு தெரியாது.

( குறுக்கு விசாரணை தொடர்ச்சி கேட்டுக் கொண்டதன் பெயரில் ஒத்திவைக்கப்படுகிறது )

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி
என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/- K. Palanivel.

சார்புநீதிபதி,

சாட்சியின் கையொப்பம்.

மேட்டுப்பாளையம்.